இருக்கின்ற பேருந்துகள் அனைத்தையும், புதிய பேருந்துகளாக இயக்குவதற்கு, இந்த அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9–55

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இருக்கின்ற மொத்த அரசுப் போக்குவரத்துக் கழகங்களிலே இருக்கின்ற பேருந்துகளுடைய எண்ணிக்கை 17,200. அதிலே 9,000 பேருந்துகள் மாற்றத்தக்க அளவிலே இருக்கின்றன. கடந்த காலத்திலே, போதுமான அளவிற்குப் பேருந்துகள் புதிதாக வாங்கப்படாத காரணத்தால், இப்போது அதிகமாகப் பழமையாக இருக்கின்றன. அதனால்தான், இந்த ஆண்டே, 2,230 பேருந்துகள் வாங்கப்பட்டிருக்கின்றன. தொடர்ந்து அதற்கான முயற்சிகள் எடுக்கப்படும். மாற்றப்பட வேண்டிய பேருந்துகள், படிப்படியாகப் புதிதாக மாற்றப்பட்டு இயக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் வேறு தொகுதியில் பார்த்திருப்பார் என்று கருதுகிறேன்; ஏனென்றால், திருவெறும்பூர் பகுதியிலே அனைத்துமே நல்ல பேருந்துகளாக விடப்பட்டிருக்கின்றன. இப்போதுகூட, அவர் கேட்டு, மூன்று புதிய வழித்தடங்கள் தொடங்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 96, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுந்தர், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

96—

சார்–பதிவாளர் அலுவலகம்

***622—திரு. க. சுந்தர்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உத்திரமேரூர் தொகுதி, சாலவாக்கம் கிராமத்திற்குச் சார்–பதிவாளர் அலுவலகம் மீண்டும் வருவதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாலவாக்கம் கிராமத்தில் மீண்டும் சார்–பதிவகம் திறப்பது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது.

2006 ஆகஸ்ட் 25]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுந்தர், இருக்கையில் இல்லை.

வினா எண் 97, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.என். பெரியண்ணன், மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

97—

நீதிமன்றம்

***1993—திரு. பி.என். பெரியண்ணன்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரியில் முதன்மை அமர்வு நீதிமன்றம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரியில் முதன்மை அமர்வு நீதிமன்றம் ஏற்படுத்துவதற்கான செயற்குறிப்பு, 2006–2007, பகுதி–2 திட்டத்தின்கீழ் கொண்டுவர உத்தேசிக்கப்பட்டது. ஆனால், மேற்கண்ட செயற்குறிப்பு, பகுதி–2 திட்டத்தில் சேர்க்கப்படவில்லை.

திரு. பி.என். பெரியண்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருங்கிணைந்த தருமபுரி மாவட்டத்தில், முதன்மை அமர்வு நீதிமன்றம், கிருஷ்ணகிரியை இருப்பிடமாகக் கொண்டு செயல்பட்டு வந்தது. அப்போது தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த பல அமைப்புகள் போராடி, எங்களுக்கு இந்த நீதிமன்றம் கிடைக்காத நிலைமையிலே, இப்போது அரசு அதைச் செய்ய முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்குத் திட்ட மதிப்பீடு ரூ.88.93 இலட்சத்திலே தயார் செய்யப்பட்டு, அரசுக்கு வந்திருக்கின்றது. பகுதி–2 திட்டத்திலே, 2006–2007 ஆம் ஆண்டிலே, முன்னுரிமை அடிப்படையிலே எடுத்துக் கொள்ளப்பட்ட நேரத்திலே சேர்க்கமுடியவில்லை. வருகின்ற ஆண்டிலே அதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வ. முல்லைவேந்தன்.